# பொருளடக்கம்


| வ.எண் | **தலைப்பு** | **பக்க எண்** |
|---|---|---|
| 1. | இழப்பீடு | 1 |
| 2 | இழப்பீடு அட்டவணை | 2 |
| 3. | குறைந்தபட்ச இழப்பீடு | 23 |
| 4. | மேம்பட்ட இழப்பீட்டிற்கான டாக்டர் அம்பேத்கர் அறக்கட்டளை | 30 |
| 5. | எளிமைப்படுத்தப்பட்ட எதிர்பாரா நிலைமைக்கான திட்டம் | 34 |

# கண்காணிப்பவர்களைக் கண்காணித்தல்
# வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடு

## 1. இழப்பீடு

விதி 12(4)ன் கீழ் உள்ள இணைப்பில் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. இது மொத்தம் எவ்வளவு பணம் உள்ளது, என்னென்ன நிலைகள் மற்றும் எந்த நிலையில் எவ்வளவு பணம் வழங்க வேண்டும் என்று தெரிவிக்கிறது.

இந்த பிரிவில் கீழ்க்கண்டவற்றைக் காணலாம்:

- ஒவ்வொரு குற்றத்திற்கும் இழப்பீட்டுத் தொகை
- வழக்கின் எந்த நிலையில் இழப்பீடு விடுவிக்கப்படும், எவ்வளவு
- பிற இழப்பீடு, அதை எவ்வாறு அணுகுவது
- நிவாரணம் மற்றும் இழப்பீடு வழங்குவதற்கு பொறுப்பான அதிகாரிகள்

இந்தியாவில், பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்திய அரசியலமைப்பின் 21ஆவது பிரிவின் கீழ் அவர்கள் அனுபவித்த இழப்பு அல்லது காயங்களுக்கு இழப்பீடு பெற உரிமை உண்டு, இது வாழ்க்கை மற்றும் சுதந்திரத்துக்கான அடிப்படை உரிமையை உறுதி செய்கிறது.

POAயின் நோக்கங்களில் ஒன்று பட்டியல் சமூகங்களைச் சார்ந்தவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பிப் பிழைத்தவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளிப்பதாகும். அதன்படி, POA அவர்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடு மட்டுமல்லாமல், விசாரணை, புலன் விசாரணை, வழக்கு விசாரணையின்போது ஏற்படும் செலவுகளையும் வழங்குகிறது. அதிக இழப்பீடு பெற பாதிக்கப்பட்டவர்கள்/ சார்ந்தோர் POAயின் கீழ் வழக்கு பதிவு செய்யப்படுகிறது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

## 2. இழப்பீட்டு அட்டவணை

**வெவ்வேறு நிலைகளில் நிவாரணத்தொகை வழங்கல்:**

- நிலை 1: முதல் தகவல் அறிக்கை (FIR).
- நிலை 2: நீதிமன்றத்துக்கு குற்றப்பத்திரிகை அனுப்பிய பிறகு.
- நிலை 3: சில வழக்குகளில் மருத்துவ அறிக்கை உறுதிப்படுத்திய பிறகு/ பிரேத பரிசோதனை அறிக்கை.
- நிலை 4: கீழமை நீதிமன்றத்தில் தண்டனை விதிக்கப்பட்ட பிறகு.
- நிலை 5: வழக்கு விசாரணையின் முடிந்த பிறகு.

| சட்டப்பிரிவு | குற்றம் | குறைந்த பட்ச நிவாரணம் (ரூபாயில்) | நிவாரணம் வழங்கப்படும் நிலைகள் |
|---|---|---|---|
| 3(1)(a) | ஒருவரது வாயில் உண்ணத்தகாத அல்லது அருவருப்பான அல்லது அபாயகரமான பொருளை வைப்பது அல்லது அத்தகைய பொருள்களை உண்ணுமாறு அல்லது குடிக்குமாறு செய்வது; | 1,00,000 | நிலை 1: 25,000 (25%)<br>நிலை 2: 50,000 (50%)<br>நிலை 4: 25,000 (25%) |
| 3(1)(b) | ஒருவரது இடத்தில் அல்லது நுழைவாயிலில் மலத்தைக் கொட்டுதல், கழிவுப் பொருள்களைக் குவித்தல், விலங்குகளின் சடலங்கள் அல்லது வேறு எந்த | 1,00, 000 | நிலை 1: 10,000 (10%)<br>நிலை 2: 50,000 (50%)<br>நிலை 4: 40,000 (40%) |

| சட்டப்பிரிவு | குற்றம் | குறைந்த பட்ச நிவாரணம் (ரூபாயில்) | நிவாரணம் வழங்கப்படும் நிலைகள் |
|---|---|---|---|
| | விரும்பத்தகாத பொருள்களையும் குவித்தல்; | | |
| 3(1)(c) | ஒருவரைக் காயப்படுத்தும், அவமானப்படுத்தும் அல்லது ஆத்திரமூட்டும் நோக்கத்துடன் அவரது அருகமைப் பகுதியில் மலத்தைக் கொட்டுதல், கழிவுப் பொருள்களைக் குவித்தல், விலங்குகளின் சடலங்கள் அல்லது வேறு எந்த விரும்பத்தகாத பொருள்களையும் குவித்தல்; | 1,00, 000 | நிலை 1: 10,000 (10%)<br>நிலை 2: 50,000 (50%)<br>நிலை 4: 40,000 (40%) |
| 3(1)(d) | ஒருவருக்கு செருப்பு மாலை போடுதல் அல்லது நிர்வாணமாக அல்லது அரை நிர்வாணமாக இழுத்துச் செல்லுதல்; | 1,00, 000 | நிலை 1: 25,000 (25%)<br>நிலை 2: 50,000 (50%)<br>நிலை 4: 25,000 (25%) |
| 3(1)(e) | ஒருவரை, அவரது ஆடைகளை களையச் செய்தல், வலுக்கட்டாயமாக தலையை மொட்டை அடித்தல், மீசையை அகற்றுதல், முகத்தில் அல்லது உடலில் வண்ணம் பூசுதல் அல்லது மனித மாண்பிற்கு இழிவான இத்தகைய வேறு எந்த செயலுக்கும் வலுக்கட்டாயமாக உட்படுத்துதல். | 1,00,000 | நிலை 1: 25,000 (25%)<br>நிலை 2: 50,000 (50%)<br>நிலை 4: 25,000 (25%) |

| சட்டப்பிரிவு | குற்றம் | குறைந்த பட்ச நிவாரணம் (ரூபாயில்) | நிவாரணம் வழங்கப்படும் நிலைகள் |
|---|---|---|---|
| 3(1)(f) | ஒருவருக்குச் சொந்தமான அல்லது அவரது வசத்தில் உள்ள அல்லது நில ஒதுக்கீட்டிற்கான அதிகாரம் உள்ள எந்த ஒரு அதிகாரியாலும் ஒதுக்கீடு செய்யப்பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட நிலத்தில் தவறான முறையில் ஆக்கிரமித்தல் அல்லது பயிர் செய்தல்; அல்லது அந்த நில உடைமையை மாற்றுதல்; | 1,00, 000 | நிலை 1: 25,000 (25%)<br>நிலை 2: 50,000 (50%)<br>நிலை 4: 25,000 (25%) |
| 3(1) (g) | ஒருவரை நிலத்திலிருந்து அல்லது இருப்பிடத்திலிருந்து தவறான முறையில் வெளியேற்றுதல் அல்லது நிலம், இருப்பிடம் அல்லது நீர்வசதி அல்லது பாசன வசதிகள் அவருக்குள்ள உரிமைகளை, வன உரிமைகள் உட்பட, அவர் அனுபவிப்பதில் குறுக்கிடுதல்; அல்லது அதில் விளையும் பொருள்களை அழித்தல் அல்லது அபகரித்தல். | 1,00, 000 | நிலை 1: 25,000 (25%)<br>நிலை 2: 50,000 (50%)<br>நிலை 4: 25,000 (25%) |
| 3(1)(h) | ஒருவரை ‘கட்டாய உழைப்பு’ பணிகளில் கட்டாயமாக ஈடுபடுத்துதல், அல்லது அரசாங்கத்தால் பொது நோக்கங்களுக்காக பணிக்கப்படுகிற எந்த ஒரு கட்டாய சேவை அல்லாத இதர கட்டாய வேலைகளில் அல்லது கொத்தடிமை வேலைகளில் ஈடுபடுத்துதல்; | 1,00, 000 | நிலை 1: 25,000 (25%)<br>நிலை 2: 50,000 (50%)<br>நிலை 4: 25,000 (25%) |

| சட்டப்பிரிவு | குற்றம் | குறைந்த பட்ச நிவாரணம் (ரூபாயில்) | நிவாரணம் வழங்கப்படும் நிலைகள் |
|---|---|---|---|
| 3(1)(i) | ஒருவரை மனித சடலங்கள் அல்லது விலங்குகளின் சடலங்களை அப்புறப்படுத்துமாறு அல்லது தூக்கிச் செல்லுமாறு கட்டாயப்படுத்துதல் அல்லது கல்லறை தோண்டுமாறு கட்டாயப்படுத்துதல்; | 1,00, 000 | நிலை 1: 25,000 (25%)<br>நிலை 2: 50,000 (50%)<br>நிலை 4: 25,000 (25%) |
| 3(1)(j) | ஒருவரை கைமுறை துப்புரவுப் பணி செய்ய வைத்தல் அல்லது இத்தகைய நோக்கத்திற்காக அத்தகைய நபரை நியமித்தல் அல்லது நியமிக்க அனுமதித்தல்; | 1,00, 000 | நிலை 1: 25,000 (25%)<br>நிலை 2: 50,000 (50%)<br>நிலை 4: 25,000 (25%) |
| 3(1)(k) | ஒரு பெண்ணை தேவதாசியாக, தெய்வம், சிலை வழிபாட்டுப் பொருள், கோயில் அல்லது வேறு மத அமைப்பில் அர்ப்பணிப்பதற்கான செயலில் ஈடுபடுதல் அல்லது ஊக்குவித்தல் அல்லது அது போன்ற வேறு நடைமுறைகளை மேற்கொள்ளுதல் அல்லது மேற்கூறிய செயல்களை அனுமதித்தல்; | 1,00, 000 | நிலை 1: 25,000 (25%)<br>நிலை 2: 50,000 (50%)<br>நிலை 4: 25,000 (25%) |
| 3(1)(l) | ஒருவரை பின்வரும் முறைகளில் கட்டாயப்படுத்துதல் அல்லது அச்சுறுத்துதல் அல்லது செய்யவிடாமல் | 85,000 | நிலை 1: 21,250 (25%)<br>நிலை 2: 42,500 (50%)<br>நிலை 4: 21,250 (25%) |

| சட்டப்பிரிவு | குற்றம் | குறைந்த பட்ச நிவாரணம் (ரூபாயில்) | நிவாரணம் வழங்கப்படும் நிலைகள் |
|---|---|---|---|
| | தடுத்தல்: | | |
| 3(1)(m) | ஒரு நகராட்சியின் உறுப்பினர் அல்லது தலைவர் அல்லது எந்த ஒரு பதவியிலும் இருக்கக்கூடிய பட்டியல் வகுப்பினர் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சேர்ந்த ஒருவர் தனது இயல்பான பணிகளையும் செயல்பாடுகளையும் மேற்கொள்ளவிடாமல் கட்டாயப்படுத்துதல் அல்லது அச்சுறுத்துதல் அல்லது தடுத்தல். | 85,000 | நிலை 1: 21,250 (25%)<br>நிலை 2: 42,500 (50%)<br>நிலை 4: 21,250 (25%) |
| 3(1)(n) | தேர்தலுக்குப் பிறகு, பட்டியல் வகுப்பினர் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சேர்ந்த ஒருவருக்கு காயம் ஏற்படுத்துதல் அல்லது கடுமையான காயம் ஏற்படுத்துதல் அல்லது தாக்குதல் அல்லது சமூகப் புறக்கணிப்பு அல்லது பொருளாதாரப் புறக்கணிப்பு விதித்தல் அல்லது விதிப்பதாக மிரட்டுதல் அல்லது அவருக்கு உரிய எந்த ஒரு பொது சேவையின் | 85,000 | நிலை 1: 21,250 (25%)<br>நிலை 2: 42,500 (50%)<br>நிலை 4: 21,250 (25%) |

| சட்டப்பிரிவு | குற்றம் | குறைந்த பட்ச நிவாரணம் (ரூபாயில்) | நிவாரணம் வழங்கப்படும் நிலைகள் |
|---|---|---|---|
| | பலன்களையும் பெறவிடாமல் தடுத்தல். | | |
| 3(1)(o) | ஒரு குறிப்பிட்ட வேட்பாளருக்கு வாக்களித்ததற்காக அல்லது வாக்களிக்கவில்லை என்பதற்காக அல்லது சட்டத்தில் உள்ள ஒரு வழிமுறைப்படி வாக்களித்ததற்காக பட்டியல் வகுப்பினர் அல்லது பட்டியல் பழங்குடியைச் சேர்ந்த ஒருவருக்கு எதிராக இந்த சட்டத்தின் கீழ் வரும் எந்த குற்றச் செயலையும் செய்தல்; | 85,000 | நிலை 1: 21,250 (25%)<br>நிலை 2: 42,500 (50%)<br>நிலை 4: 21,250 (25%) |
| 3(1)(p) | ஒருவருக்கு எதிராக, பொய்யான, தீய நோக்குடையதாக அல்லது அலைக்கழிப்புக்குள்ளாக்குவதாக உரிமையியல் அல்லது குற்றவியல் சட்ட நடைமுறைகளை, மேற்கொள்ளுதல்; | 85,000 | நிலை 1: 21,250 (25%)<br>நிலை 2: 42,500 (50%)<br>நிலை 4: 21,250 (25%) |
| 3(1)(q) | எந்த ஒரு அரசுப் பணியாளருக்கு தவறான அல்லது அற்பமான (சிறுமைத்தனமான) தகவல் அளிப்பது, அதன்மூலம் அந்த பணியாளர் பட்டியல் வகுப்பினர் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சேர்ந்த ஒருவரை | 1,00, 000 | நிலை 1: 25,000 (25%)<br>நிலை 2: 50,000 (50%)<br>நிலை 4: 25,000 (25%) |

| சட்டப்பிரிவு | குற்றம் | குறைந்த பட்ச நிவாரணம் (ரூபாயில்) | நிவாரணம் வழங்கப்படும் நிலைகள் |
|---|---|---|---|
| | காயப்படுத்தும் வகையில் அல்லது ஆத்திரமூட்டும் வகையில் அந்தப் பணியாளர் தனது சட்டப்பூர்வ அதிகாரத்தைப் பயன்படுத்த வைத்தல் | | |
| 3(1)(r) | ஒருவரை அவமானப்படுத்தும் நோக்கத்துடன் பொது மக்கள் பார்வை உள்ள எந்த ஒரு இடத்திலும் வேண்டுமென்றே அவமதித்தல் அல்லது அச்சுறுத்தல்; | 1,00, 000 | நிலை 1: 25,000 (25%)<br>நிலை 2: 50,000 (50%)<br>நிலை 4: 25,000 (25%) |
| 3(1)(s) | ஒருவரை பொதுமக்கள் பார்வை உள்ள எந்த ஒரு இடத்திலும் சாதிப் பெயர் சொல்லி அவதூறு செய்தல்; | 1,00, 000 | நிலை 1: 25,000 (25%)<br>நிலை 2: 50,000 (50%)<br>நிலை 4: 25,000 (25%) |
| 3(1)(t) | புனிதமாக அல்லது உயர்வாக மதிக்கப்படுவது என்று பொதுவாக அறியப்பட்ட எந்த பொருளையும் அழித்தல், சேதப்படுத்துதல் அல்லது சீர்குலைத்தல். | 1,00, 000 | நிலை 1: 25,000 (25%)<br>நிலை 2: 50,000 (50%)<br>நிலை 4: 25,000 (25%) |
| 3(1)(u) | எழுதப்படுகிற அல்லது பேசப்படுகிற வார்த்தைகளால் அல்லது சைகைகளால் அல்லது கண்கூடான செயல்களால் அல்லது வேறு வகைகளில் பட்டியல் | 1,00, 000 | நிலை 1: 25,000 (25%)<br>நிலை 2: 50,000 (50%)<br>நிலை 4: 25,000 (25%) |

| சட்டப்பிரிவு | குற்றம் | குறைந்த பட்ச நிவாரணம் (ரூபாயில்) | நிவாரணம் வழங்கப்படும் நிலைகள் |
|---|---|---|---|
| | வகுப்பினர் அல்லது பட்டியல் பழங்குடியினருக்கு எதிராக பகை உணர்வுகள், வெறுப்பு அல்லது தீய எண்ணத்தை வளர்த்தல் அல்லது வளர்க்க முயலுதல்; | | |
| 3(1)(v) | எழுதப்படுகிற வார்த்தைகளால் அல்லது பேசப்படுகிற வார்த்தைகளால் அல்லது வேறு வழிகளில், பட்டியல் வகுப்பினர் அல்லது பட்டியல் பழங்குடியினர் உயர்வாகக் கருதுகிற, காலம் சென்ற எவரொருவரையும் அவமரியாதை செய்தல்; | 1,00, 000 | நிலை 1: 25,000 (25%)<br>நிலை 2: 50,000 (50%)<br>நிலை 4: 25,000 (25%) |
| 3(1)(w) | பட்டியல் வகுப்பு அல்லது பட்டியல் பழங்குடியைச் சேர்ந்த ஒரு பெண்ணை, அவர் பட்டியல் வகுப்பு அல்லது பட்டியல் பழங்குடியைச் சேர்ந்தவர் என்பது தெரிந்தே, வேண்டுமென்றே தொடுதல்; அவ்வாறு தொடுவது பாலியல் தன்மை கொண்டதாகவும் அந்தப் பெண்ணின் ஒப்புதல் இல்லாமலும் நிகழ்த்தப்படுகையில்; | 2,00, 000 | நிலை 1: 50,000 (25%)<br>நிலை 2:1,00,000(50%)<br>நிலை 4: 50,000 (25%) |
| | சட்டத்தின் அட்டவணையோடு பிரிவு 3(2)(v) சேர்த்து படிக்கவும் –அமிலம், முதலானவற்றை | | |

| சட்டப்பிரிவு | குற்றம் | குறைந்த பட்ச நிவாரணம் (ரூபாயில்) | நிவாரணம் வழங்கப்படும் நிலைகள் |
|---|---|---|---|
| | பயன்படுத்துவதால் தன்னிச்சையாக கொடுங்காயம் விளைவித்தல் [IPC பிரிவு 326A தண்டனை சட்டம் (45 of 1860)<br><br>சட்டத்தின் அட்டவணையோடு பிரிவு 3(2)(va) சேர்த்து படிக்கவும் –தன்னிச்சையாக அமிலம் வீசுவது அல்லது வீச முயற்சி செய்வது [IPC பிரிவு 326B தண்டனை சட்டம் (45/1860)<br>(i) பாதிக்கப்பட்டவரின் முகத்தில் 2 சதவீதம் அல்லது அதற்கு கூடுதலான தீக்காயம் அல்லது<br>(ii) கண், காது, மூக்கு மற்றும் வாயின் செயல்பாடுகள் முடங்கிப்போதல் அல்லது<br>(iii) பாதிக்கப்பட்டவரின் உடலில் 30 சதவீதத்திற்கும் அதிகமான தீக்காயம் இருந்தால்<br><br>ஒருவேளை பாதிக்கப்பட்டவரின் உடலில் தீக்காயம் 10 | 8,25,000<br><br>4,15,000 | நிலை 1: 4,12,500 (50%)<br>நிலை 3: 4,12,500 (50%)<br><br>நிலை 1: 2,07,500 (50%) |

| சட்டப்பிரிவு | குற்றம் | குறைந்த பட்ச நிவாரணம் (ரூபாயில்) | நிவாரணம் வழங்கப்படும் நிலைகள் |
|---|---|---|---|
| | முதல் 30 சதவீதத்திற்குள்ளாக இருந்தால் | | நிலை 3: 2,07,500 (50%) |
| | (i) ஒருவேளை பாதிக்கப்பட்டவரின் உடலில் தீக்காயம் 10 சதவீதத்திற்கு குறைவாக இருந்தால் (தீக்காயம் முகத்தை தவிர) | 85,000 | நிலை 1: 42,500 (50%)<br>நிலை 3: 42,500 (50%) |
| | சட்டத்தின் அட்டவணையோடு பிரிவு 3(2)(va) சேர்த்து படிக்கவும் –பெண்ணை மானபங்கப்படுத்தும் உன்நோக்கத்துடன் அவரைத் தாக்குதல் அல்லது குற்றமுறு பலப்பிரயோகம் [IPC பிரிவு 354 தண்டனை சட்டம் (45/1860)] | 2,00, 000 | நிலை 1: 1,00,000 (50%)<br>நிலை 2: 50,000 (25%)<br>நிலை 5: 50,000 (25%) |
| | சட்டத்தின் அட்டவணையோடு பிரிவு 3(2)(va) சேர்த்து படிக்கவும் –பாலியல் துன்புறுத்தல் மற்றும் பாலியல் துன்புறுத்தலுக்கான தண்டனை [IPC பிரிவு 354A தண்டனை சட்டம் (45 of 1860)] | 2,00, 000 | நிலை 1: 1,00,000 (50%)<br>நிலை 2: 50,000 (25%)<br>நிலை 5: 50,000 (25%) |

| சட்டப்பிரிவு | குற்றம் | குறைந்த பட்ச நிவாரணம் (ரூபாயில்) | நிவாரணம் வழங்கப்படும் நிலைகள் |
|---|---|---|---|
| | சட்டத்தின் அட்டவணையோடு பிரிவு 3(2)(va) சேர்த்து படிக்கவும் –பெண்ணை துகிலுரியும் உள்நோக்கத்துடன் தாக்குதல் அல்லது குற்றமுறு பலப்பிரயோகத்தைப் பயன்படுத்துதல் [IPC பிரிவு 354B தண்டனை சட்டம் (45 of 1860)] | 2,00, 000 | நிலை 1: 1,00,000 (50%)<br>நிலை 2: 50,000 (25%)<br>நிலை 5: 50,000 (25%) |
| | சட்டத்தின் அட்டவணையோடு பிரிவு 3(2)(va) சேர்த்து படிக்கவும் –அந்தரங்கத்தில் தலையிடுதல் [IPC பிரிவு 354C தண்டனை சட்டம் (45 of 1860)] | 2,00, 000 | நிலை 1: 20,000 (10%)<br>நிலை 2: 1,00,000 (50%)<br>நிலை 4: 80,000 (40%) |
| | சட்டத்தின் அட்டவணையோடு பிரிவு 3(2)(va) சேர்த்து படிக்கவும் –குற்றமுறு பின்தொடர்தல் [IPC பிரிவு 354D தண்டனை சட்டம் (45 of 1860)] | 2,00, 000 | நிலை 1: 20,000 (10%)<br>நிலை 2: 1,00,000 (50%)<br>நிலை 4: 80,000 (40%) |

| சட்டப்பிரிவு | குற்றம் | குறைந்த பட்ச நிவாரணம் (ரூபாயில்) | நிவாரணம் வழங்கப்படும் நிலைகள் |
|---|---|---|---|
| | சட்டத்தின் அட்டவணையோடு பிரிவு 3(2)(va) சேர்த்து படிக்கவும் –பிரிந்து வாழும்போது அவரின் மனைவியுடன் கணவனால் பாலியல் வல்லுறவு [IPC பிரிவு 376B தண்டனை சட்டம் (45 of 1860)] | 2,00,000 | நிலை 2: 50,000 (25%)<br>நிலை 3: 1,00,000 (50%)<br>நிலை 4: 50,000 (25%) |
| | சட்டத்தின் அட்டவணையோடு பிரிவு 3(2)(va) சேர்த்து படிக்கவும் –ஆளுமை நிலையில் உள்ள ஒரு நபரால் பாலியல் உடலுறவு [IPC பிரிவு 376C தண்டனை சட்டம் (45 of 1860)] | 4,00,000 | நிலை 2: 1,00,000 (25%)<br>நிலை 3: 2,00,000 (50%)<br>நிலை 5: 1,00,000 (25%) |
| | சட்டத்தின் அட்டவணையோடு பிரிவு 3(2)(va) சேர்த்து படிக்கவும் –ஒரு பெண்ணின் மானத்தை அவமதிக்கும் உள்நோக்கத்துடனான வார்த்தை, செய்கை, செயல் [IPC பிரிவு **509** தண்டனை சட்டம் (45 of 1860)] | 2,00,000 | நிலை 1: 50,000 (25%)<br>நிலை 2: 1,00,000 (50%)<br>நிலை 3: 50,000 (25%) |

| சட்டப்பிரிவு | குற்றம் | குறைந்த பட்ச நிவாரணம் (ரூபாயில்) | நிவாரணம் வழங்கப்படும் நிலைகள் |
|---|---|---|---|
| | சட்ட பிரிவு 3(1)(y) பொது மக்களின் இதர பிரிவுகளைச் சேர்ந்தோர் அல்லது வேறு எந்த ஒரு பிரிவையும் சேர்ந்தோர் பயன்படுத்தவோ அல்லது தொடர்பு கொள்ளவோ உரிமை உள்ள ஒரு பொது ஒய்விடத்திற்குச் செல்லும் வழியை பயன்படுத்தும் மரபு சார்ந்த உரிமையை பட்டியல் வகுப்பினர் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சேர்ந்த ஒருவர் பயன்படுத்த முடியாமல் அல்லது தொடர்பு கொள்ள முடியாமல் தடுத்தல்; | 4,25,000 | நிலை 1: 1,06,250 (25%)<br>நிலை 2: 2,12,500 (50%)<br>நிலை 4: 1,06,250 (25%) |
| | சட்ட பிரிவு 3(1)(z) ஒருவரை தனது வீடு, கிராமம் அல்லது வேறு குடியிருப்பு இடத்தை விட்டுச் செல்லுமாறு கட்டாயப்படுத்துதல் அல்லது வெளியேற வைத்தல்;<br>அத்தகையதான நிலையில், இந்த சட்டக்கூறில் உள்ள எதுவும், ஒரு பொதுக் கடமையை நிறைவேற்றுவதையொட்டி மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைக்கும் பொருந்தாது; | 1,00,000 | நிலை 1: 25,000 (25%)<br>நிலை 2: 50,000 (50%)<br>நிலை 4: 25,000 (25%) |

| சட்டப்பிரிவு | குற்றம் | குறைந்த பட்ச நிவாரணம் (ரூபாயில்) | நிவாரணம் வழங்கப்படும் நிலைகள் |
|---|---|---|---|
| | சட்ட பிரிவு 3(1)(za) பட்டியல் வகுப்பினர் அல்லது பட்டியல் பழங்குடியைச் சேர்ந்த ஒருவர் பின்வரும் செயல்களில் ஈடுபடுவதை எந்த வகையிலும் தடுத்தல்– (A) மற்றவர்களோடு சரிசமமாக ஒரு வட்டாரத்தின் பொதுச் சொத்து ஆதாரங்கள், அல்லது இடுகாடு அல்லது சுடுகாட்டைப் பயன்படுத்துதல் அல்லது, எந்த ஒரு ஆறு, நீரூற்று, ஓடை, கிணறு, குளம், நீர்த்தொட்டி, தண்ணீர் குழாய் அல்லது இதர நீர்நிலைகள் அல்லது குளியல் கூடங்கள், எந்த ஒரு பொதுப் போக்குவரத்து வசதியை எந்த ஒரு சாலை, அல்லது பாதையை பயன்படுத்துதல்; | 1,00,000 | நிலை 1: 25,000 (25%)<br>நிலை 2: 50,000 (50%)<br>நிலை 4: 25,000 (25%) |
| | சட்ட பிரிவு 3(1)(za) பட்டியல் வகுப்பினர் அல்லது பட்டியல் பழங்குடியைச் சேர்ந்த ஒருவர் பின்வரும் செயல்களில் ஈடுபடுவதை எந்த வகையிலும் தடுத்தல்– (B) மலையேறுதல் அல்லது பொது இடங்களில் சைக்கிள் அல்லது மோட்டார் சைக்கிள் ஓட்டுதல் அல்லது காலில் செருப்பு அணிதல் அல்லது புதிய ஆடைகள் அணிதல் | 1,00,000 | நிலை 1: 25,000 (25%)<br>நிலை 2: 50,000 (50%)<br>நிலை 4: 25,000 (25%) |

| சட்டப்பிரிவு | குற்றம் | குறைந்த பட்ச நிவாரணம் (ரூபாயில்) | நிவாரணம் வழங்கப்படும் நிலைகள் |
|---|---|---|---|
| | அல்லது திருமண ஊர்வலம் நடத்துதல், அல்லது திருமண ஊர்வலங்களில் குதிரையில் அல்லது எந்த வாகனத்திலும் ஏறுதல்; | | |
| | சட்ட பிரிவு 3(1)(za) பட்டியல் வகுப்பினர் அல்லது பட்டியல் பழங்குடியைச் சேர்ந்த ஒருவர் பின்வரும் செயல்களில் ஈடுபடுவதை எந்த வகையிலும் தடுத்தல்– (C) பொது மக்களுக்குப் பொதுவான எந்த வழிபாட்டுத் தலத்திலும் அல்லது அதே மதத்தைப் பின்பற்றுகிற மற்றவர்களின் வழிபாட்டுத் தலத்தில் நுழைதல் அல்லது யாத்திரைகள் உள்ளிட்ட எந்த ஒரு மதம் சார்ந்த, சமூகம் சார்ந்த அல்லது கலாச்சாரம் சார்ந்த ஊர்வலங்களிலும் பங்கெடுத்தல்; | 1,00,000 | நிலை 1: 25,000 (25%)<br>நிலை 2: 50,000 (50%)<br>நிலை 4: 25,000 (25%) |
| | சட்ட பிரிவு 3(1)(za) பட்டியல் வகுப்பினர் அல்லது பட்டியல் பழங்குடியைச் சேர்ந்த ஒருவர் பின்வரும் செயல்களில் ஈடுபடுவதை எந்த வகையிலும் தடுத்தல்– (D) எந்தக் கல்வி நிறுவனம், மருத்துவமனை, மருந்தகம், ஆரம்ப சுகாதார மையம் அல்லது கடை, பொது | 1,00,000 | நிலை 1: 25,000 (25%)<br>நிலை 2: 50,000 (50%)<br>நிலை 4: 25,000 (25%) |

| சட்டப்பிரிவு | குற்றம் | குறைந்த பட்ச நிவாரணம் (ரூபாயில்) | நிவாரணம் வழங்கப்படும் நிலைகள் |
|---|---|---|---|
| | பொழுதுபோக்கு இடம் அல்லது வேறு பொது இடத்தில் நுழைதல்; பொது மக்களுக்குப் பொதுவான எந்த ஒரு இடத்திலும் பொது மக்கள் பயன்பாட்டுக்காக உள்ள எந்த தளவாடங்கள் அல்லது பொருள்களை பயன்படுத்துதல்; அல்லது | | |
| | சட்ட பிரிவு 3(1)(za) பட்டியல் வகுப்பினர் அல்லது பட்டியல் பழங்குடியைச் சேர்ந்த ஒருவர் பின்வரும் செயல்களில் ஈடுபடுவதை எந்த வகையிலும் தடுத்தல்– (E) பொது மக்களின் மற்ற பிரிவின் தனிநபர்கள் அல்லது எந்த ஒரு பிரிவினரும் பயன்படுத்தவோ அல்லது தொடர்புகொள்ளவோ உரிமை உள்ள எந்த தொழில் அல்லது எந்த பணிப் பதவி அல்லது வர்த்தகம் அல்லது வணிகம், எந்த ஒரு அலுவல் சார்ந்த நியமனத்தில் ஈடுபடுதல்; | 1,00,000 | நிலை 1: 25,000 (25%)<br>நிலை 2: 50,000 (50%)<br>நிலை 4: 25,000 (25%) |
| | சட்ட பிரிவு 3(1)(zb) ஒருவர் சூன்யம் வைப்பதில் ஈடுபடுகிறார் அல்லது அவர் ஒரு சூனியக்காரர் என | 1,00,000 | நிலை 1: 25,000 (25%)<br>நிலை 2: 50,000 (50%)<br>நிலை 4: 25,000 (25%) |

| சட்டப்பிரிவு | குற்றம் | குறைந்த பட்ச நிவாரணம் (ரூபாயில்) | நிவாரணம் வழங்கப்படும் நிலைகள் |
|---|---|---|---|
| | குற்றம்சாட்டி அவருக்கு உடல் ரீதியாக துன்பம் தருதல் அல்லது மன ரீதியாக வேதனை ஏற்படுத்துதல்; | | |
| | சட்ட பிரிவு 3(1)(zc) ஒரு நபர் அல்லது குடும்பம் அல்லது ஒரு குழுவினருக்கு எதிராக சமூகப் புறக்கணிப்பு அல்லது பொருளாதாரப் புறக்கணிப்பைத் திணித்தல்; அல்லது மிரட்டுதல்; | 1,00,000 | நிலை 2: 1,00,000 (100%) |
| | சட்ட பிரிவு 3(1)(i)&(ii) பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினத்தைச் சாராத எவர் ஒருவரும்<br>(i) போலியான ஆதாரம் தருவது அல்லது கிளப்பிவிடுவது அல்லது செய்ய வைப்பதற்கு, அதன் மூலம் பட்டியல் வகுப்பினர் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அந்த நேரத்தில் நடைமுறையில் உள்ள சட்டத்தின்படி மரண தண்டனை வழங்கத்தக்க ஒரு குற்றச் செயலில் ஈடுபட்டதாக தீர்ப்பளிக்கப்படுவதற்கு வேண்டுமென்றே அந்த விளைவை ஏற்படுத்துவதற்காக அல்லது அதற்கு | 4,15,000 | நிலை 1: 1,03,750 (25%)<br>நிலை 2: 2,07,500 (50%)<br>நிலை 4: 1,03,750 (25%) |

| சட்டப்பிரிவு | குற்றம் | குறைந்த பட்ச நிவாரணம் (ரூபாயில்) | நிவாரணம் வழங்கப்படும் நிலைகள் |
|---|---|---|---|
| | இட்டுச் செல்லும் என்பது தெரிந்தே, அல்லது ஆயுள் சிறைத் தண்டனையும் அபராதமும் சேர்ந்த கடுமையான சிறைத் தண்டனை வழங்கப்படும்; இத்தகைய போலியான அல்லது இட்டுக்கட்டப்பட்ட ஆதாரத்தின் விளைவாக பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினத்தைச் சேர்ந்த அப்பாவியான ஒருவருக்கு இந்த தண்டனை அறிவிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்குமானால், இவ்வாறு போலியான ஆதாரம் அளித்த அல்லது உருவாக்கிய நபருக்கு மரண தண்டனை அளிக்கப்படும். | | |
| | (ii) போலியான ஆதாரம் தருவது அல்லது உருவாக்குவது, அந்த விளைவை ஏற்படுத்தும் நோக்கத்துடன் அல்லது அது அவ்வாறு ஏற்படக் கூடும் என தெரிந்தே அல்லது கட்டாயப்படுத்துவது அல்லது மிரட்டுவது அல்லது கிளப்பிவிடுவது அல்லது செய்ய வைப்பதற்கு, அதன் மூலம் பட்டியல் வகுப்பினர் அல்லது பட்டியல் பழங்குடியினத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அந்த | | |

| சட்டப்பிரிவு | குற்றம் | குறைந்த பட்ச நிவாரணம் (ரூபாயில்) | நிவாரணம் வழங்கப்படும் நிலைகள் |
|---|---|---|---|
| | நேரத்தில் நடைமுறையில் உள்ள சட்டத்தின்படி மரண தண்டனை அல்லாத ஆனால் ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் சிறைத் தண்டனை விதிக்கத்தக்க ஒரு தண்டனை வழங்கத்தக்க ஒரு குற்றச் செயலில் ஈடுபட்டதாக தீர்ப்பளிக்கப்படுவதற்கு இட்டுச் செல்வது. | | |
| | சட்ட பிரிவு 3(2) இந்திய தண்டனைச் சட்டத்தின் (45/1860) கீழ் பத்தாண்டுகள் அல்லது அதற்கு மேல் சிறைத்தண்டனைக்கு உரிய எந்தவொரு குற்றச்செயலிலும் ஈடுபடுகிற குற்றவாளிக்கு அபராதத்துடன் ஆயுள் சிறைத்தண்டனை விதித்துத் தண்டனை அளிக்கப்படும்; | 4,00,000 | நிலை 1: 1,00,000 (25%)<br>நிலை 2: 2,00,000 (50%)<br>நிலை 4: 1,00,000 (25%) |

| | | | |
|---|---|---|---|
| | சட்டத்தின் அட்டவணையோடு பிரிவு 3(2)(va) சேர்த்து படிக்கவும். இந்திய தண்டனைச் சட்டத்தின் (45/1860) கீழ் கொடுக்கப்பட்ட அட்டவணையில் வகைப்படுத்தப்பட்டுள்ள குற்றங்களை செய்பவர்கள் இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் குறிப்பிட்டுள்ள தண்டனையுடன் தண்டிக்கப்பட வேண்டும். | 2,00,000 | நிலை 1: 50,000 (25%)<br>நிலை 2: 1,00,000 (50%)<br>நிலை 4: 50,000 (25%) |
| | சட்ட பிரிவு 3(2)(vii) அரசு ஊழியராக இருந்து கொண்டு இந்தப் பிரிவின் கீழ் வரும் எந்த ஒரு குற்றத்தையும் செய்வது ஓராண்டுக்கு குறையாத சிறை தண்டனைக்கு உரியது, ஆனால் அந்தக் குற்றத்துக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள தண்டனையின் அளவுக்கு நீட்டிக்க தக்கதாகும். | 2,00,000 | நிலை 1: 50,000 (25%)<br>நிலை 2: 1,00,000 (50%)<br>நிலை 4: 50,000 (25%) |
| | இயலாமை – 100% இயலாமை | 8,25,000 | நிலை 2: 4,12,500 (50%)<br>நிலை 3: 4,12,500 (50%) |
| | இயலாமை 50 சதவீதத்திற்கு அதிகமாக – ஆனால் 100 சதவீதத்திற்கு குறைவாக. | 4,50,000 | நிலை 2: 2,25,500 (50%)<br>நிலை 3: 2,25,500 (50%) |
| | இயலாமை 50 சதவீதத்திற்கு குறைவாக. | 2,50,000 | நிலை 2: 1,25,500 (50%)<br>நிலை 3: 1,25,500 (50%) |

| | | | |
|---|---|---|---|
| | வன்புணர்வு, இயற்கைக்கு மாறான குற்றங்கள் அல்லது கூட்டு வன்புணர்வு<br>(i) வன்புணர்ச்சி, இன்னும் பிற அல்லது இயற்கைக்கு மாறான குற்றங்கள் [இந்திய தண்டனை சட்ட பிரிவு 375, 376, 376-A, 376-E மற்றும் 377 (45/1860)]<br><br>(ii) கூட்டு வன்புணர்ச்சி<br>[இந்திய தண்டனை சட்ட பிரிவு 376D (45/1860)] | 5,00, 000<br><br>8,25,000 | நிலை 2: 1,25,000 (25%)<br>நிலை 3: 2,50,000 (50%)<br>நிலை 5: 1,25,000 (25%)<br><br>நிலை 2: 2,06,250 (25%)<br>நிலை 3: 4,12,500 (50%)<br>நிலை 5: 2,06,250 (25%) |
| | கொலை அல்லது மரணம் | 8,25,000 | நிலை 2: 4,12,500 (50%)<br>நிலை 3: 4,12,500 (50%) |

## 3. குறைந்தபட்ச இழப்பீடு (அரசாங்கம் கட்டாயம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்)

**இழப்பீடு மற்றும் மறுவாழ்வு**

| சட்ட பிரிவு | குற்றம் | அரசாங்கம் கட்டாயம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் |
|---|---|---|
| 3 (1) (f) | தவறான நில சாகுபடி அல்லது ஆக்கிரமிப்பு | சம்பந்தப்பட்ட மாநில அரசு அல்லது யூனியன் பிரதேச நிர்வாகத்தால் அரசாங்கத்தின் செலவில் தேவையான இடங்களில் நிலம் அல்லது வளாகம் அல்லது நீர் வழங்கல் அல்லது நீர்ப்பாசன வசதி மீட்டெடுத்தல். |
| 3 (1) (g) | நிலம் அல்லது இருப்பிடத்திலிருந்து தவறாக வெளியேற்றுவது அல்லது வன உரிமைகள் உள்ளிட்ட உரிமைகளில் தலையிடுவது | |
| 3 (1) (p) | தவறான, தீங்கிழைக்கும் அல்லது மோசமான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது | இங்கே குறிப்பிடப்பட்ட தொகை அல்லது மேற்கொள்ளப்பட்ட உண்மையான சட்ட செலவுகள் மற்றும் சேதங்கள், இவற்றில் எது குறைவோ அந்த தொகை செலுத்தப்பட வேண்டும் / திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். |
| 3 (1) (q) | ஒரு அரசு ஊழியருக்கு தவறான மற்றும் அற்பமான தகவல்களை வழங்குதல் | |
| 3 (2) (v) | அமிலம் போன்றவற்றை பயன்படுத்துவதன் மூலம் தானாக முன்வந்து கடுமையான காயத்தை ஏற்படுத்துவது [இந்திய தண்டனை | அமில தாக்குதலுக்கு உள்ளானவருக்கு சிகிச்சையளிப்பதற்கான முழு பொறுப்பையும் மாநில அரசு அல்லது யூனியன் பிரதேச நிர்வாகம் ஏற்கும் |

| சட்ட பிரிவு | குற்றம் | அரசாங்கம் கட்டாயம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் |
|---|---|---|
| | சட்டத்தின் பிரிவு 326A (45/1860)] | |
| 3 (2) (va) | தானாக முன்வந்து அமிலத்தை வீசுதல் அல்லது அமிலத்தை வீச முயற்சி செய்தல் [இந்திய தண்டனை சட்டத்தின் பிரிவு 326B (45/1860)]. | |
| 3 (1) (x) | தண்ணீரை மாசுபடுத்துதல் அல்லது கெட்டுப்போகச் செய்தல். | தண்ணீர் அசுத்தப்படும்போது சுத்தம் செய்வது உட்பட சாதாரண வசதியை மீட்டெடுப்பதற்கான முழுச் செலவும் சம்பந்தப்பட்ட மாநில அரசு அல்லது யூனியன் பிரதேச நிர்வாகத்தால் ஏற்கப்படும். கூடுதலாக, உள்ளூராட்சி நிர்வாகத்துடன் கலந்தாலோசித்து மாவட்ட நிர்வாகத்தால் தீர்மானிக்கப்பட்டு இயற்கையான சமூக சொத்துக்களை உருவாக்குவதற்காக ரூ.8,25,000 தொகை மாவட்ட நீதிபதியிடம் வைப்புநிதியாக வைக்கப்படும். |
| 3 (1) (y) | உல்லாச போக்கிடத்தை அணுகுவதற்கான பாரம்பரிய உரிமையை மறுத்தல் அல்லது பயன்படுத்த அணுகுவதிலிருந்து தடையாக இருத்தல். | பாதை உரிமையை மீட்டெடுப்பதற்கான செலவுகளை சம்பந்தப்பட்ட மாநில அரசு அல்லது யூனியன் பிரதேச நிர்வாகம் ஏற்க வேண்டும். |

| சட்ட பிரிவு | குற்றம் | அரசாங்கம் கட்டாயம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | |
| 3 (1) (z) | குடியிருக்கும் வீடு, கிராமம், வசிக்கும் இடத்தை விட்டு வெளியேற கட்டாயப்படுத்துதல். | வீடு புனரமைப்பு, வீட்டில் வசிக்கும் உரிமை, கிராமம் அல்லது வேறு இடத்தில் தங்குவதற்கான உரிமை ஆகியன சம்பந்தப்பட்ட மாநில அரசு அல்லது யூனியன் பிரதேச நிர்வாகம். |
| 3(1)(za)(A) | பட்டியல் சாதி அல்லது பழங்குடியின உறுப்பினரின் கீழ்கண்ட பயன்பாட்டை எந்த வகையிலும் தடுப்பது.<br>(A) ஒரு பகுதியின் பொதுவான சொத்து, வளங்களை பயன்படுத்துதல் அல்லது புதைகுழி அல்லது தகனம் செய்யும் இடத்தை மற்றவர்களுடன் சமமாக பயன்படுத்துதல் அல்லது எந்தவொரு நதி, நீரோடை, நீரூற்று, கிணறு, தொட்டி, குட்டை, நீர்க் குழாய் அல்லது பிற நீர்ப்பாசன இடம் அல்லது எந்த குளியல் படித்துறை, எந்தவொரு பொது போக்குவரத்து சாலை அல்லது பாதை. | வீடு அழிக்கப்பட்டால், அரசாங்க செலவில் வீட்டை புனரமைக்க வேண்டும். |
| 3(1)(za)(B) | பட்டியல் சாதி அல்லது பழங்குடியின | உரிமையை மீட்டெடுத்தலை சம்பந்தப்பட்ட மாநில |

| சட்ட பிரிவு | குற்றம் | அரசாங்கம் கட்டாயம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் |
|---|---|---|
| | உறுப்பினரின் கீழ்கண்ட பயன்பாட்டை எந்த வகையிலும் தடுப்பது.<br>(B) மிதிவண்டிகளை, மோட்டார் சைக்கிள்களை இயக்குவது/ பயன்படுத்துவது, பொது இடங்களில் காலணிகள், புதிய ஆடைகளை அணிவது, திருமண ஊர்வலம் நடத்துவது, குதிரை சவாரி அல்லது ஏதேனும் வாகனத்தில் திருமண ஊர்வலம் பட்டியல் சமூகத்தினர் நடத்துவது.. | அரசு அல்லது யூனியன் பிரதேச நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும். |
| 3(1)(za)(C) | பட்டியல் சாதி அல்லது பழங்குடியின உறுப்பினரின் கீழ்கண்ட பயன்பாட்டை எந்த வகையிலும் தடுப்பது.<br>(C) பொது மக்களுக்கு திறந்திருக்கும் வழிபாட்டுத் தலத்திற்குள் நுழைவது, ஜாத்ராக்கள் உள்ளிட்ட மத, சமூக அல்லது கலாச்சார ஊர்வலங்கள் நடத்துவது அல்லது பங்கேற்பது. | உரிமையை மீட்டெடுத்தலை சம்பந்தப்பட்ட மாநில அரசு அல்லது யூனியன் பிரதேச நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும். |
| 3(1)(za)(D) | பட்டியல் சாதி அல்லது பழங்குடியின உறுப்பினரின் கீழ்கண்ட பயன்பாட்டை எந்த | உரிமையை மீட்டெடுத்தலை சம்பந்தப்பட்ட மாநில அரசு அல்லது யூனியன் பிரதேச நிர்வாகம் |

| சட்ட பிரிவு | குற்றம் | அரசாங்கம் கட்டாயம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் |
|---|---|---|
| | வகையிலும் தடுப்பது.<br>(D) எந்தவொரு கல்வி நிறுவனம், மருத்துவமனை, மருந்தகம், ஆரம்ப சுகாதார நிலையம், கடை அல்லது பொழுதுபோக்கு இடம் அல்லது வேறு எந்த பொது இடத்திலும் நுழைவது; அல்லது பொதுமக்களுக்கு திறந்திருக்கும் எந்த இடத்திலும் பொதுப் பயன்பாட்டிற்காக எந்தவொரு பாத்திரங்களையும் அல்லது பொருட்களையும் பயன்படுத்துதல். | மேற்கொள்ள வேண்டும். |
| 3(1)(za)(E) | பட்டியல் சாதி அல்லது பழங்குடியின உறுப்பினரின் கீழ்கண்ட பயன்பாட்டை எந்த வகையிலும் தடுப்பது.<br>(E) எந்தவொரு தொழிலையும் நடத்துவது அல்லது எந்தவொரு தொழில், வர்த்தகம், வணிகம், வேலை வாய்ப்பை மற்ற பொதுச் சமூக மக்கள் அல்லது அதில் உள்ள மற்ற உறுப்பினர் பயன்படுத்த உரிமை உள்ள அல்லது பயன்படுத்தக்கூடியதை. | உரிமையை மீட்டெடுத்தலை சம்பந்தப்பட்ட மாநில அரசு அல்லது யூனியன் பிரதேச நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும். |

| சட்ட பிரிவு | குற்றம் | அரசாங்கம் கட்டாயம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் |
|---|---|---|
| 3(1)(zb) | சூனியக்காரி அல்லது சூனியம் செய்வது சூனியக்காரி என்ற குற்றச்சாட்டின் பேரில் உடல்ரீதியான தீங்கு அல்லது மனரீதியான வேதனை ஏற்படுத்துவது. | பாதிக்கப்பட்டவருக்கு ஏற்படும் கோபம், அவமதிப்பு, காயம் மற்றும் அவதூறு ஆகியவற்றுக்கு ஈடு செய்ய வேண்டும். |
| 3(1)(zc) | சமூக அல்லது பொருளாதாரப் புறக்கணிப்பை திணித்தல் அல்லது அச்சுறுத்துதல் | சம்பந்தப்பட்ட மாநில அரசு அல்லது யூனியன் பிரதேச நிர்வாகம், அனைத்து பொருளாதார மற்றும் சமூக சேவைகளையும் மற்ற நபர்களுக்கு சமமாக வழங்குவதை மீட்டெடுத்தல் |
| | கொலை, மரணம், படுகொலை, பாலியல், வன்புணர்ச்சி, கூட்டு வன்புணர்ச்சி, நிரந்தர இயலாமை மற்றும் கொள்ளை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கூடுதல் நிவாரணம் | மேற்கூறியவைகளின் கீழ் செலுத்தப்படும் நிவாரணத் தொகைகளுக்கு கூடுதலாக, வன்கொடுமை நடந்த மூன்று மாதங்களுக்குள் பின்வருமாறு நிவாரணம் அளிக்க ஏற்பாடு செய்யப்படலாம்: –<br>(i) சம்பந்தப்பட்ட மாநில அரசு அல்லது யூனியன் பிரதேச நிர்வாகத்தின் அரசு ஊழியருக்கு கொடுப்பதைப் போல், பட்டியல் சாதி அல்லது பழங்குடியினத்தைச் சேர்ந்த இறந்த நபர்களின் மனைவி அல்லது அவர்களைச் சார்ந்தவர்களுக்கு அடிப்படை ஓய்வூதியம், இறந்தவரின் குடும்பத்தில் ஒரு உறுப்பினருக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க அளவு படிகள், வேலைவாய்ப்பு, விவசாய நிலம், |

| சட்ட பிரிவு | குற்றம் | அரசாங்கம் கட்டாயம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | தேவைப்பட்டால் முழுத் தொகையும் செலுத்தி ஒரு வீடு வாங்கிக்கொடுக்க வேண்டும்.<br>(ii) பட்டப்படிப்பு நிலை வரையிலான கல்வியின் முழு செலவு மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைகளைப் பராமரித்தல். அரசாங்கத்தால் முழுமையாக நிதியளிக்கப்பட்டு ஆசிரம பள்ளிகள் அல்லது தங்கிப் பயிலும் பள்ளிகளில் குழந்தைகளை அனுமதிக்கலாம்;<br>(ii) பாத்திரங்கள், அரிசி, கோதுமை, பருப்பு, பருப்பு வகைகள் போன்றவற்றை மூன்று மாதத்திற்கு வழங்க வேண்டும். |
| | முழுமையான அழிவு அல்லது எரிந்த வீடுகள் | செங்கல் அல்லது கல் வீடு, எரிக்கப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட இடத்தில் அரசாங்க செலவில் கட்டித்தரப்பட வேண்டும் அல்லது வழங்கப்பட வேண்டும். |

**4. மேம்பட்ட இழப்பீட்டுக்கான டாக்டர் அம்பேத்கர் அறக்கட்டளை**

டாக்டர் அம்பேத்கர் அறக்கட்டளையானது டாக்டர் அம்பேத்கர் தேசிய நிவாரண திட்டத்தை பட்டியல் சமூகங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்டவர்களுக்காக நடத்துகிறது. POA–யின் கீழ் கொடூரமான குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி பண நிவாரணம் வழங்க எதிர்பாரா நிலைக்கான ஏற்பாடாகும்.

